**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 272/2024** **நாள் 09.06.2026**

**வாசா.2, திரு.கி.பாலமுரளி**

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 5ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் சாட்சியம் அளித்துக்கொள்ள நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. எனக்கு வயது 52. நான் விவசாய தொழில் செய்கிறேன். தாவா சொத்து பற்றி எனக்கு 30 ஆண்டு காலமாக நேரடியாக தெரியும். தாவா சொத்தை சீனிவாச நாயுடு எப்படி அனுபவித்து வந்தார் என்று எனக்கு தெரியுமா என்று கேட்டால் அவர் ஆடு மாடுகளை வைத்து அனுபவித்து வந்தார் . சீனிவாச நாயுடுக்கு யார் யார் வாரிசுதாரர்கள் என்று எனக்கு தெரியும். சீனிவாச நாயுடுவின் வாரிசுதாரரிடமிருந்து 1ம் வாதியின் கணவர் கிரையம் வாங்கியது எனக்கு நேரடியாக தெரியும் . தாவா சொத்தில் வங்கி, ஏடிஎம் வைத்து அனுபவித்து வருகின்றார்கள் என்று எனக்கு தெரியும் . தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் ஒரு பொது தென்வடல் நடைபாதை உள்ளது. பொது நடைபாதைக்கு வடக்கு பக்கம் தான் 5ம் எதிர்வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். 5ம் எதிர்வாதியின் வீடு கட்டப்பட்டு சுமார் 50 ஆண்டு காலம் இருக்கும். 5ம் எதிர்வாதியானவர் வாதிகளிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 5ம் எதிர்வாதியானவர் பிரச்சனை செய்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.